# பாரதிதாசன் பல்கலைக்கழகம் **REVISED**

(Accredited with 'A+' Grade by NAAC in the Third Circle)
திருச்சிராப்பள்ளி–620 024.
தொலைபேசி:0431- 2407016 / 2407060
தொலை நகலி:
**0431-2407444**
முனைவர்.சு.சீனிவாச ராகவன்,எம்.ஏ.,எம்.எல்.ஐ.எஸ்ஸி.,பி.எச்.டி., மின்னஞ்சல் : **coe@bdu.ac.in**
தேர்வு நெறியாளர் (பொ) இணையதளம் : **www.bdu.ac.in**

---

ந.க.எண்: தே.பி./பட்டயம்/சான்றிதழ்/நவம்பர் 2021/எழுத்துத் தேர்வுகள்/02 நாள்: 03.11.2021

பெறுநர்

1.முதல்வர் அவர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்று (தன்னாட்சி பெறாத) பட்டயப்படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படும் கல்லூரிகள்.

(மற்றும்)

2.முதல்வர்/இயக்குநர் அவர்கள், **BDU-BDC** –ன் வெளிவளாக திட்டம் வாயிலாக பட்டயப்படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்புகள் நடத்தப்பெறும் மருத்துவமனை மற்றும் நிறுவனங்கள்.

அய்யா / அம்மையீர்,

பொருள்: தேர்வுப் பிரிவு – பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் - நவம்பர் 2021 – தேர்வு விண்ணப்பங்கள் பெறுவது – தேர்வுகள் துவங்கும் நாள் அறிவிப்பது – தொடர்பாக.

பார்வை: துணைவேந்தரது அனுமதி ஆணை நாள்: 03.11.2021

-----------

நவம்பர் 2021-ல் நடைபெற இருக்கும் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான பருவத் தேர்வுகளுக்கு, பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் தேர்வுக் கட்டணத்துடன் பெறுவதற்கான கடைசி நாள், தண்டத்தொகையுடன் பெறுவதற்கான கடைசி நாள் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் ஆகியவை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தண்டத் தொகையின்றி மாணவர்களிடமிருந்து பெறுவதற்கு கடைசி நாள் | **17.11.2021** | புதன்கிழமை |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தண்டத்தொகையுடன் மாணவர்களிடமிருந்து பெறுவதற்கு கடைசி நாள் (17.11.2021 –க்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ரூ.300/- தண்டத் தொகையுடன் 18 % GST தொகையையும் சேர்த்து கூடுதலாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்) | **24.11.2021** | புதன்கிழமை |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கல்லூரி வாயிலாக பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் | **29.11.2021** | திங்கள்கிழமை |
| **பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான எழுத்துத் தேர்வுகள் துவங்கும் நாள்** | **05.01.2022** | **புதன்கிழமை** |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இத்தகவலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் சுற்றறிக்கை வாயிலாகவும் கல்லூரி அறிவிப்புப் பலகையிலும் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நவம்பர் 2021 பட்டயம் மற்றும் சான்றிதழ் தேர்வுகள் அனைத்தும் கொரோனா காலத்திற்கு முன்பு நடைபெற்றவாறு, வழக்கம் போல் மாணவர்கள் பயின்ற அந்தந்த கல்லூரிகளிலேயே நேரடித்தேர்வுகளாக **(Physical Mode in the Offline System)** நடைபெறும் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பல்கலைக்கழகத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் கூடுதல் இடங்களின் எண்ணிக்கை குறித்து பதிவாளரின் அனுமதிக்கடிதத்தின் நகலை இணைக்க வேண்டும்.

தேர்வு விண்ணப்பங்களுடன் செலுத்தப்படும் **e-receipt**-ன் தொகையானது தாங்கள் அனுப்பும் மாணவர்களது சுருக்கப்பட்டியலில் உள்ள தொகையுடன் நேர்செய்து அனுப்பப்பட வேண்டும் என கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், 2021-ல் சேர்க்கை பெற்று நவம்பர் 2021 தேர்வை எழுதும் 6 மாத கால சான்றிதழ் படிப்பு மாணவர்கள் தேர்வுக் கட்டணத்துடன் பட்டயம் / சான்றிதழ் பெறுவதற்கான தொகையையும் **(Convocation Fee)** சேர்த்து செலுத்த வேண்டும்.

பல்கலைக்கழகத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாளுக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலும், எக்காரணம் கொண்டும் இளநிலை தேர்வுக் கட்டணத்துடன் பட்டயம் மற்றும் சான்றிதழ் தேர்வுக் கட்டணத்தை சேர்த்துச் செலுத்தக்கூடாது.

இக்கடிதம் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக்-கொள்ளப்படுகிறது.

தேர்வு நெறியாளர் (பொ)